தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 04
ஆகஸ்ட் 2023

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்





கலைஞர்
100
1924 - 2023

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

மகளிர் நலன் காக்க
தகுதியுள்ள குடும்பத் தலைவிகளுக்கு
**மாதந்தோறும் ரூ.1,000/-**

இவ்வாண்டிற்கு ரூ.7,000/- கோடி நிதி ஒதுக்கீடு

மகளிரின் விலைமதிப்பில்லா
பங்களிப்புக்கான சமூக அங்கீகாரம்
சுயமரியாதை பயணத்தில்

ஒரு மைல்கல்





## தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு மாபெரும் திட்டம்



**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009
நாள் : 01.08.2023

**அன்பிற்குரிய மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகளே / தாய்மார்களே,**

உங்கள் அனைவருக்கும் இந்தியாவின் 76வது சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பிலான முற்றம் மாத இதழ் மிகச் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களை உங்களிடம் அவ்வப்போது பகிர்ந்து கொள்ளவுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் சாதனைகள் பலவற்றை படைத்திருக்கிறது. மகளிருக்கான பொருளாதார சுதந்திரமே உண்மையான பெண் விடுதலைக்கு வழிவகுக்கும். இதனை உணர்ந்தே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுவை தர்மபுரியில் தொடங்கி வைத்தார்கள்.

இன்றைக்கு தமிழ்நாடெங்கும் பரவி விரிந்துள்ள சுய உதவிக் குழுக்கள் எண்ணற்ற சாதனைகளை புரிந்து வருகின்றன. மகளிர், தங்களுக்கான பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான ஓர் ஏற்பாடாக இருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள், இன்றைக்கு ஒரு தொழிற்புரட்சியையே நடத்தி வருகின்றன.

நான் எந்த மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் சென்றாலும், முதலில் சந்திப்பது என்னவோ மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளைத் தான். அவர்களின் தயாரிப்புகள் அடங்கிய எத்தனையோ பொருட்காட்சிகளுக்கு நான் சென்று வந்திருக்கிறேன். நானே பல பொருட்களை வாங்கியிருக்கிறேன். பிறரையும், வாங்குமாறு ஊக்கப்படுத்தி வருகிறேன்.

இந்த 2 ஆண்டுகளில், ஊரகப் பகுதிகளில் 4,64,709 உறுப்பினர்களைக் கொண்ட 45,238 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 30,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதுவரை 8,092.41 கோடி ரூபாய்க்கும் மேல் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

77 உற்பத்தியாளர் குழுக்கள், 5 இலட்சம் ஊட்டச்சத்து தோட்டங்கள், 50 இயற்கை விவசாயத் தொகுப்புகள், 177 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் மற்றும் 6,135 உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கியுள்ளோம். இந்திய ஒன்றியத்துக்கே வழிகாட்டும் வகையில், 9,020 மாற்றுத் திறனாளிகள் குழுக்களை உள்ளடக்கிய 23,048 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உங்களுடைய உற்பத்திப் பொருட்களை சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதற்காக, தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக உற்பத்தியாளர் – சந்தையாளர் சந்திப்பை திருச்சியில் சமீபத்தில் நடத்தி முடித்தோம்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 40,438 புதிய சுய உதவிக் குழுக்கள், 861 பகுதி அளவிலான மற்றும் 9 நகர அளவிலான கூட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 3,512 உற்பத்தியாளர் குழுக்கள், 1,002 தொழில் குழுக்கள் மற்றும் 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் துவக்கப்பட்டு, அவற்றில் தகுதி பெற்றவைகளுக்கு துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளன.

இவைகள் மட்டுமின்றி இன்னும் பல சாதனைகள் படைத்து வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றென்றும் துணைநிற்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

அன்புடன்,

(உதயநிதி ஸ்டாலின்)

முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009



## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

அனைத்துத்துறைகளிலும் தங்களின் ஆளுமையையும், திறமையும் வெளிப்படுத்தி, திறன்மிகு தொழிலாளர்களாகவும், சிறந்த தொழில் முனைவோர்களாகவும் திகழ்ந்து வரும் சுய உதவிக்குழு மகளிர் அனைவருக்கும் எனது சுதந்திரதின நல்வாழ்த்துகள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் அனைத்தும் நன்மை தருவதாகவும், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் உள்ளன. நீங்கள் மேற்கொண்டுவரும் செயல்பாடுகள் குறித்து எவ்வளவோ எடுத்துச் சொல்லலாம். உங்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் ஆக்கப்பூர்வமான செயல்கள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதுடன், மாவட்டங்களில் நடைபெறும் அரசு சார்ந்த நிகழ்ச்சிகளிலும் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்குவது, சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப்பொருட்களின் கண்காட்சிகளைத் துவக்கிவைத்து பார்வையிடுவது, மகளிர் சுய உதவிக்குழுவினருடன் கலந்துரையாடுவது, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயபாடுகளை ஆய்வு செய்து, திட்டங்களை விரைந்து முடித்திட உரிய ஆலோசனைகளை வழங்குவது போன்ற செயல்களின் மூலம் நமக்கு ஊக்கம் அளித்து வருவதுடன், அரசின் திட்டங்களான மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் உள்ளிட்ட முக்கியமான திட்டங்களில் சுய உதவிக்குழு மகளிரை ஈடுபடுத்தி, அவர்களுக்கு பெருமையளித்து வருகிறார்கள்.

சுய உதவிக்குழு மகளிர் அனைவரும் மேலும் ஊக்கத்துடன் செயல்பட்டு மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்திற்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

உங்கள் அனைவருக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தோழியான முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் உங்களை சந்தித்து, எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

நமது சுய உதவிக் குழு இயக்கமானது கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை வளம் பெறச் செய்த மாபெரும் இயக்கமாகும். நமது இயக்கம் பெற்ற வெற்றி பிற மாநிலங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாகக் காரணமாக இருந்தது என்பது நமக்குக் கிடைத்த பெருமையாகும். சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சியில் அக்கறைக் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மாவட்டந்தோறும் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகங்களை புதுப்பித்து தந்தது, நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நிதியுதவிகள் வழங்கியது மட்டுமல்லாமல் மாவட்டந்தோறும் நடைபெறும் அரசு விழாக்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும் வழங்குவது, மகளிரின் வாழ்வாதாரத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் மாதந்தோறும் மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 1000/– வழங்கும் திட்டம் ஆகிய நல்ல பல திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், நமது சுய உதவிக் குழு இயக்கத்தை மேலும் வளர்ச்சி அடையச் செய்திடும் நோக்குடன் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக 30,000 கோடி வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைந்திட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக விற்பனைக் கண்காட்சிகள் நடத்துவது, மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, திட்டத்தின் பயன்கள் மக்களுக்கு முழுமையாக சென்றடைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவது போன்ற செயல்களை மேற்கொண்டு வருகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளால் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் தனது வெற்றிப் பயணத்தை தடைகள் ஏதுமின்றி தொடர்ந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவார்கள்.

நினைப்பதெல்லாம் உயர்வாகவே நினைக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த எண்ணத்தை விடக்கூடாது என்பதை உரைக்கும்

> "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
> தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" –(குறள் 596)

என்ற குறள் வரிகளுக்கேற்ப சுய உதவிக் குழுவினரான நீங்கள் எண்ணுவதெல்லாம் உயர்வானதாக இருக்க வேண்டும். உங்களின் உயர்வான சிந்தனைகளும், அயராத செயல்பாடுகளும் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும் என்பதை மனதில் நிறுத்தி நீங்கள் செயல்பட வேண்டும். தற்போது மழைக்காலம் தொடங்கி விட்டது. மழை நீரை வீணாக்காமல் முறையாக சேமிக்கும் பணிகளை சுய உதவிக் குழுவினர் மேற்கொள்ள வேண்டும். மேலும் மழைக்கால நோய்களும் பரவிவரும் காலமாக இது இருப்பதால், தண்ணீரை காய்ச்சி வடிகட்டி குடிப்பது, உடல் நலம் பாதிக்கப்பட்டால் முறையாக மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது, சுற்றுச்சூழலை பாதிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை குறைப்பது, குப்பைகளை முறையாக அகற்றுவது போன்ற பயனுள்ள செயல்களையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

**அன்புள்ள சகோதரிகளே,**

நமது சுய உதவிக் குழு இயக்கத்தை வெற்றிகரமான இயக்கமாக மாற்றிய உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் வாழ்வில் வளம் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் தொடங்கப்பட்ட நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கடந்த நாற்பதாண்டுகளில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. இதற்குக் காரணம் சுய உதவிக் குழு மகளிரான உங்களின் அயராத செயல்பாடுகளும், தளராத முயற்சிகளும்தான்.

சுய உதவிக் குழுவினருக்கு ஊக்கம் தரும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு திட்டங்களையும், அறிவிப்புகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் போன்றவற்றின் மூலம் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழுக்களில் இணைந்துள்ள ஏழை எளிய மக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்க வங்கிகளுடனும், நலத்திட்டங்களை செயல்படுத்தவும், இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கவும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. பிரபல விற்பனை நிறுவனங்களுடன் இணைந்து சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் மட்டுமின்றி மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திலும் சுய உதவிக் குழு மகளிரை அதிக அளவில் ஈடுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள் – 517)

ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற பொருளினை உணர்த்தும் வகையில், வான்புகழ் வள்ளுவனின் வரிகளில் கூறியுள்ளபடி, அரசின் மகளிர் நலத் திட்டங்களை உரிய முறையில், முறையாக செயல்படுத்தும் உன்னதப் பணியினை நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது. சிறப்புமிகு நமது நிறுவனத்தின் வெற்றிக்கு உங்களின் பங்களிப்பை இன்னும் அதிக அளவில் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற**

-(குறள்-95)

அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது

# உள்ளே...


| | |
|---|---|
| கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைத்தல் | 08 |
| அரசு பல்துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் | 12 |
| தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் கீழ் மண்டல அளவிலான கருத்தரங்கு மற்றும் ஆய்வு | 14 |
| கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் | 17 |
| தமிழ்நாடு நாள் | 19 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 33 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 04 • ஆகஸ்ட் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.



## ஆனந்த சுதந்திரம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

இந்தியத் திருநாட்டின் சுதந்திர தினவிழா கொண்டாடும் இவ்வேளையில் முற்றம் தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது. பல நாடுகள் வேற்று நாட்டினரால் அடிமைப்படுத்தப்பட்டு, அதன்பின் நீண்ட போராட்டங்களின் மூலம் விடுதலை பெற்ற சரித்திரத்தை அறிந்திருக்கின்றோம். இந்தியர்களாகிய நாம் பல நூறு ஆண்டுகளாக நம்மை அடிமைப்படுத்தி வந்த ஆங்கிலேயர்களின் பிடியிலிருந்து சுதந்திரத்தை போராடிப் பெற்றோம். “ஆடுவோமே... பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்...” என்று மகிழ்ச்சியாக சுதந்திரத்தைக் கொண்டாடினாலும், நம்மில் பெரும்பாலானோர் எதிர்மறையான சிந்தனைகளுக்கு அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டு வருகின்றோம்.

நம்மை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தவர்களிடமிருந்து அரசியல் சுதந்திரத்தை பெற்றோம். பொருளாதார சுதந்திரத்தை பெற்றோம். தனி மனித சுதந்திரத்தைப் பெற்றோம். ஆனால், நம் எண்ணங்களில் படிந்திருக்கும் சாதி வேற்றுமை, தீண்டாமை, ஆண் ஆதிக்கம் போன்ற சமுதாயத்தை அழிக்கும் பிரிவினை சிந்தனைகளுக்கு நாம் அடிமைகளாகி விட்டோம். இந்த அடிமைத்தனம் நம்மிடையே நாளடைவில் பழக்க வழக்கங்களாக மாறி விட்டன. சில சடங்குகள், சம்பிரதாயங்கள், மூட நம்பிக்கைகள் போன்றவைகள் அடிமைத்தனத்தை வலுப்பெற செய்து வருவதால் அதிலிருந்து விடுபட முடியாமல் உழன்று கொண்டிருக்கின்றோம்.

மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், காமராஜர் மற்றும் பல தலைவர்கள் அரும்பாடுபட்டு வெள்ளையர்களிடமிருந்து அரசியல், பொருளாதார மற்றும் தனி மனித சுதந்திரத்தை பெற்றுத் தந்தனர். அதே வேளையில் பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், அம்பேத்கார், விவேகானந்தர் போன்ற சமூக சிந்தனையாளர்கள் நாம் அடிமையாகி விட்ட அழிவினை ஏற்படுத்தும் பழக்க வழக்கங்களில் இருந்து விடுதலை பெற பெரிதும் பாடுபட்டனர்.

நாம் அடிமையாகி போன, அழிவு மிக்க பழக்க வழக்கங்களிலிருந்து எப்பொழுது விடுதலை பெறுகிறோமோ அதுதான் முழுமையான உண்மையான மற்றும் மகிழ்ச்சியான சுதந்திரமாகும். எனவே, நேர்மறையான மற்றும் பரந்த சிந்தனைகளுடனும் ஒற்றுமையுடனும் சுதந்திரத்தை கொண்டாடுவோம்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

# கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைத்தல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.07.2023 அன்று மதுரை புதுநத்தம் சாலையில், 2,13,338 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் திரு. ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவர்கள் கலந்து கொண்டனர்.














## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.07.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமை தொடங்கி வைத்தார். மேலும், விண்ணப்பங்களைப் பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன், அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்து, கலந்துரையாடினார். பின்னர், அங்கு நடைபெற்ற மக்களைத் தேடி மருத்துவம் முகாமினை பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.



இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜி.கே.மணி, திரு. எஸ்.பி. வெங்கடேஸ்வரன், திரு. இரா. ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் திரு. பி.பழனியப்பன், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர்-1 திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







# வேளாண் வணிகத் திருவிழா 2023–யை தொடங்கி வைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.07.2023 அன்று சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023-யை தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்தார். உடன் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், சர்க்கரைத் துறை ஆணையர் திரு. சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மை - உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், இ.ஆ.ப., வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச. நடராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



# "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" செயல்படுத்துவது குறித்து ஆலோசனைக் கூட்டம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 07.07.2023 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" செயல்படுத்துவது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச்செயலாளர் திரு. சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், காணொலி வாயிலாக மாவட்ட உயர் அலுவலர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

# 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" செயல்படுத்துவது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம்



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 13.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாக, மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை'' செயல்படுத்துவது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் திரு சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்



10.07.2023 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, பெசன்ட் சாலை, என்.கே.தி தேசிய பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 2022-2023 கல்வியாண்டில் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 235.92 கோடி மதிப்பில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி லட்சுமி பிரியா, இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத் துறை நிர்வாக இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# அரசு பல்துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் அரசு பல்துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 18.07.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. கு.பிச்சாண்டி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா.முருகேஷ், இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. கி.கார்த்திகேயன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் திரு. அருண்லால், இ.வ.ப., உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# கல்லூரி மாணவ - மாணவிகளுடன் கலந்துரையாடல்

கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், 19.07.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "நான் முதல்வன் திட்டம்" குறித்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். உடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புகளின் சார்பில் தமிழ்நாட்டின் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களின் செயல்பாடுகள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.07.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், பள்ளி மாணவ மாணவியரின் பசியைப் போக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், இளைஞர் திறன் திருவிழாக்கள், சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், கிராம மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகள், அவைகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவிகள், பூமாலை வணிக வளாகங்களின் செயல்பாடுகள், திறன் பயிற்சிகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அரசின் நலத் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகியவை குறித்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து, திட்டங்களை திறம்பட செயல்படுத்திட உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் நிலை, குறிப்பாக சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,000 கோடி வங்கிக் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் அடைந்துள்ள முன்னேற்றம், இலக்கை விரைந்து எய்திட மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் போன்றவை இந்த ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் கீழ் மண்டல அளவிலான கருத்தரங்கு மற்றும் ஆய்வு







தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தீன்தயாள் உபத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் மண்டல அளவிலான கருத்தரங்கு மற்றும் பணி முன்னேற்ற ஆய்வு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் 2023 ஜுன் 21, 22, 23 ஆகிய நாட்களில் நடைபெற்றது.


தற்போதைய "DDU-GKY திட்டத்தை முடித்து வைத்தல் மற்றும் பணி முன்னேற்றத்தை மாநில வாரியாக ஆய்வு செய்தல்" எனும் தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கு மற்றும் ஒரு நாள் ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு உட்பட பீகார், உத்திரபிரதேசம் ஜார்கண்ட், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி, அந்தமான் நிக்கோபர் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த முதன்மை செயலாளர்கள், முதன்மை செயல் அலுவலர்கள், முதன்மை இயக்கு அலுவலர்கள், மாநிலத் திட்ட மேலாளர்கள் மற்றும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் தேசிய, மாநில அளவிலான அலுவலர்கள், மத்திய தொழில்நுட்ப உதவி மைய அலுவலர்கள் என சுமார் 60 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில ஊரக அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு. க.ஜி.பூட்டியா, இ.வ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பி.செந்தில்குமார், இ.ஆ.ப., உத்தரப் பிரதேச மாநில ஊரக வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் திரு. சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக, கருத்தரங்கின் துவக்க விழா நிகழ்ச்சியில், DDU-GKY திட்டத்தின் கூடுதல் இயக்குனர் திரு. ஆர்.சங்கர் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச. பிரியதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை நிகழ்த்தியதுடன்,






அமைச்சகத்தின் DDU-GKY திட்டத்தின் இணை இயக்குனர் திரு. எஸ்.கே.திவாரி, தேசிய இயக்க மேலாளர்கள் திரு. வினை பாண்டே, திரு. அபூ ஒசாமா, திரு. விஷால் குப்தா ஆகியோர் கருத்தரங்கினை விரிவாக நடத்திச் சென்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில திட்ட மேலாளர்கள் திருமதி. பி.ஜெயசுதா, திரு. தனபதி, திரு. ஜி.குமரன் ஆகியோரும், CTSA அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.








# ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள் (IFC) குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம் மற்றும் கண்டுணர் சுற்றுலா










ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள் (IFC) குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம் மற்றும் கண்டுணர் சுற்றுலா 2023 ஜூலை 10, 11 மற்றும் 12 ஆகிய மூன்று நாட்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குனர் (திறன் வளர்ப்பு) திரு. பி. மந்திராச்சலம் அவர்கள் இந்த பயிலரங்கத்தினை துவக்கி வைத்தார். தேசிய இயக்க மேலாளர் திரு. விவேக் குஞ்ச் தலைமையிலான தேசிய இயக்க மேலாண்மைக் குழுவினர் பங்கேற்பாளர்களுக்கு நோக்குநிலைப் பயிற்சியினை அளித்தனர்.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழக நிபுணர்கள் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அலுவலர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவித் திட்ட அலுவலர்கள், DRPs பண்ணை வாழ்வாதாரம் மற்றும் பண்ணை சாரா வாழ்வாதாரம் ஆகியோர் பயிலரங்கம் மற்றும் கண்டுணர் சுற்றுலாவில் பங்கேற்றனர்.

முதல்நாள் நடைபெற்ற பயிலரங்கத்தில் ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பில் அணி திரட்டல், நிறுவுதல், பின்னோக்கு இணைப்புகள், வணிக திட்டமிடல், முன்னோக்கு இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பு பகுதியில் தொகுப்பு அடிப்படையிலான நிறுவனங்களை அமைப்பதில் NMMUவின் வழிகாட்டுதல்களை விளக்கினர்.

இரண்டாம் நாள், பங்கேற்பாளர்கள் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பினையும், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அனைத்து அம்சங்களும் ஒருங்கே இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பண்ணையத்தையும் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து மூன்றாம் நாள், பங்கேற்பாளர்கள் மாதவரத்தில் உள்ள TANUVAS வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு பங்கேற்பாளர்கள் பல்வேறு கால்நடைகள் தொடர்பான ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளின் கூறுகள் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பொருத்தத்தைக் கண்டறிந்தனர்.

## தமிழ்நாட்டு மகளிரின் சமூக பொருளாதார வாழ்வில் புரட்சியை ஏற்படுத்தும்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இட ஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் நமது தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டு மகளிரின் சமூக பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்திட்டத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 7,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன் பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.03.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.



பெண்களுக்கு சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இடஒதுக்கீடும் வழங்கி பெண்ணுரிமை காத்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” என்று இத்திட்டத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 07.07.2023 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், ‘‘சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும். அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, இந்த மகளிர் உதவித் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்று தெரிவித்ததோடு, எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்று அறிவுறுத்தினார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுடையோர்

- ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர். குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகக் கருதப்படுவர்.



- ஒவ்வொரு தகுதி வாய்ந்த குடும்பத்திலும் உள்ள குடும்பத் தலைவி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம்.
- குடும்ப அட்டையில் குடும்பத் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பெண் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத் தலைவரின் மனைவி குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார்.
- குடும்ப அட்டையில் ஆண் குடும்பத்தலைவரின் மனைவியின் பெயர் ஏதேனும் காரணத்தினால் இல்லாதபட்சத்தில், குடும்பத்திலுள்ள குடும்பத் தலைவியாக இதர பெண்களில் ஒருவர் கருதப்படுவார்.
- ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட 21 வயது நிரம்பிய பெண்கள் இருந்தால், இத்திட்டத்தின்கீழ் பயன் பெற, ஒரு நபரைக் குடும்ப உறுப்பினர்கள் தேர்வு செய்து விண்ணப்பிக்கச் செய்யலாம்.
- திருமணமாகாத தனித்த பெண்கள், கைம்பெண்கள் மற்றும் திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால் அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவர்.

### பொருளாதாரத் தகுதிகள்

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு கீழ் இருக்க வேண்டும்.
- ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாகப் புன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும்.
- வீட்டு உபயோகத்துக்கு ஆண்டிற்கு 3600 யூனிட்டிற்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தி இருக்க வேண்டும்.



### தகுதி இல்லாதவர்கள்

- குடும்பத்தில் ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கும் மேல் ஈட்டி வருமானவரி கணக்கு தாக்கல் செய்பவர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள்.
- மாநில, மத்திய அரசு ஊழியர்கள்/ பொதுத்துறை நிறுவனங்கள்/ வங்கிகளின் ஊழியர்கள் / வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளின் ஊழியர்கள்
- ஊராட்சி வார்டு கவுன்சிலர்கள் தவிர்த்த உள்ளாட்சி பிரதிநிதிகள்
- சொந்த பயன்பாட்டுக்கு கார், ஜீப், டிராக்டர், கனரக வாகனம் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்துள்ளவர்கள்
- ஆண்டுக்கு 50 லட்சத்திற்கும் மேல் ஆண்டு விற்பனை (Annual Turnover) செய்து ஜிஎஸ்டி செலுத்தும் தொழில் நிறுவன உரிமையாளர்கள்
- ஏற்கனவே முதியோர் ஓய்வூதியம் (OAP), விதவை ஓய்வூதியம், அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரிய ஓய்வூதியம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் மற்றும் அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறும் குடும்பங்கள்

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்தும் முறை

- இத்திட்டத்திற்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை இருக்கும் நியாயவிலைக் கடை அமைந்திருக்கும் விண்ணப்பப் பதிவு முகாமில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒவ்வொரு பொது விநியோக நியாய விலைக் கடை பணியாளரும் தங்களது பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு ஒவ்வொரு தெருவாரியாக நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பத்தினை வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர்.



- ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் விண்ணப்பங்களில் டோக்கன் எண், பயனாளிகள் முகாமிற்கு வருகை புரிய வேண்டிய தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு வழங்கப்படும்.
- அக்குறிப்பிட்ட நாளில் முகாமிற்கு வருகை தரும் விண்ணப்பதாரர்களால்வழங்கப்படும்பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இதற்கெனத் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ள கைப்பேசி செயலி வழியாக நேரடியாக பதிவு செய்யப்படும்.
- விண்ணப்பதாரர்கள் முகாமிற்கு வரும்பொழுது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம், மின்வாரிய கட்டண இரசீது ஆகியவற்றை அசலாக சரிபார்த்தலுக்கு கொண்டு வர வேண்டும்.
- விண்ணப்பங்கள் பதிவு செய்தவுடன் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதற்கான தகவல் விண்ணப்பதாரருக்கு கைப்பேசி வழியாக குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும்.
- பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மின்னணு முறையில் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டவுடன் அது தொடர்பான தகவல் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.
- திட்டம் தொடங்கப்பட்டவுடன் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பலனாக அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

# மெட்ராஸ் மாகாணம் to தமிழ்நாடு...
# (ஜூலை 18 - தமிழ்நாடு நாள்)

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கு முன்னால் இருந்தே பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மாகாணங்களை மொழியின் அடிப்படையில் பிரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து வந்தனர். அந்த வகையில் ஒடிசா மாநிலம் முதல் முதலில் 1935ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் தனி மாகாணமாக உருவானது. அதைத் தொடர்ந்து நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்தும் மொழிவாரி மாகாணம் தொடர்பான கோரிக்கை எழுந்து வலுப்பெற்றது.

தமிழகத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஜீவா, ம.பொ.சி, நேசமணி, சங்கரலிங்கனார் போன்ற தலைவர்கள் மாகாணங்களை மொழி அடிப்படையில் பிரிப்பது குறித்து போராட்டங்கள் நடத்தினர். அப்போது பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு மொழிவாரி மாகாணங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

அதன்படி, 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி அப்போது இந்தியாவிற்குள் அடங்கியிருந்த மாகாணங்கள் அனைத்தும் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு 16 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டன. மெட்ராஸ் மாகாணமாக இருந்த பகுதிகள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளின் அடிப்படையில் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.

பிரிக்கப்பட்ட மெட்ராஸ் மாகாணத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர் வைக்க வலியுறுத்தி தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். 1967ஆம் ஆண்டு தமிழ்நாடு முதல்வரான பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜூலை 18ஆம் தேதி மெட்ராஸ் மாகாணத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அது சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்திலும் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா அதே ஆண்டு நவம்பர் 23ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. 1969ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் தேதி தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாடு தவிர, மற்ற மாநிலங்கள் அனைத்தும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளான நவம்பர் 1ஆம் தேதியில் மாநில நாளைக் கொண்டாடி வருகின்றன. அதைப் பின்பற்றி நவம்பர் 1ஆம் தேதியையே தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

இந்நிலையில் 2021ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்ததும், அக்டோபர் 30ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில் "தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட நாளான ஜூலை 18ஆம் தேதி தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்" என்று தெரிவித்தார். அதன்படி கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜூலை 18ஆம் தேதி தமிழ்நாடு நாள் கொண்டாடப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வரான திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க "தமிழ்நாடு நாள்" 18.07.2023 அன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள், விழிப்புணர்வு ஊர்வலங்கள், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரைப் போட்டிகள், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள் என மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "தமிழ்நாடு நாள்" வாழ்த்துச் செய்தி

"தமிழ்நாடு சொல் அல்ல தமிழரின் உயிர். பரந்து விரிந்த நமது இந்தியத் துணைக்கண்டத்துக்கு அழகு சேர்ப்பது, இங்குள்ள பன்முகத்தன்மையே. 1956 நவம்பர் 1 அன்று மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, மெட்ராஸ் மாகாணத்தில் இருந்து பிரிந்து சென்று புதிய மாநிலங்கள் தோன்றின. ஆனால், நம் தாய் நிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் பெற இன்னும் பதினோரு ஆண்டுகள் காக்க வேண்டியதாயிற்று. 1967-இல் இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநிலக் கட்சியான தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. தமிழ் நிலத்தின் பெருமகன் - தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார். 1967 ஜூலை 18-இல் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டினோம். மறைமலை அடிகள், தந்தை பெரியார், சோமசுந்தர பாரதியார், சங்கரலிங்கனார், சிலம்புச் செல்வர் ம.பொ.சி என இந்தப் போராட்டத்தின் வேர் மிக ஆழமானது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தமிழ்நாடு நாளில், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்கிடப் பாடுபட உறுதியேற்போம். தனித்துவமிக்க தமிழ்நாட்டின் ஒளி இந்தியா முழுதும் பரவட்டும். தமிழ்நாடு வாழ்க. தமிழ்நாடு வாழ்க. தமிழ்நாடு வாழ்க"

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் “தமிழ்நாடு நாள்’’ வாழ்த்துச் செய்தி**

“ஒரு சட்டமன்ற தீர்மானத்தோடு ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கனவையும் நிறைவேற்றும் விதமாக தமிழ் நிலப்பரப்புக்கு ‘தமிழ்நாடு’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிட்ட நாள் இன்று. முத்தமிழ் அறிஞர் வளர்த்தெடுத்த தமிழ்நாட்டை, தமிழ்நாடாகவே போற்றி பாதுகாக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்தினத்தை தமிழ்நாடு நாள் என்று அறிவித்தார்கள். ‘மாநிலத்தின் பெயர்ச்சொல் என்றில்லாமல் நம் அனைவரின் உயிர் சொல்லாக உயர்ந்து நிற்கும்’ தமிழ்நாடு வாழ்க. அனைவருக்கும் தமிழ்நாடு நாள் வாழ்த்துகள்”

## செந்தமிழ் நாடெனும் போதினிலே...

1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதி சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று அப்போது முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரை மாற்றினார். அப்போது முதலாக சென்னை மாகாணம் தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி 18.07.2023 அன்று “தமிழ்நாடு நாள்” தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நம் தாய்த் திருநாட்டின் சில சுவாரஸ்யமான உண்மைகளைக் காண்போம்.

- தமிழ்நாடு இந்தியாவின் 10 ஆவது பெரிய மாநிலமாகவும், மக்கள் தொகையில்6ஆவதுஇடத்திலும்உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது பெரிய பங்களிப்பாளராகவும் உள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கியதுறைமுகங்கள் சென்னை மற்றும் தூத்துக்குடியில் உள்ளன.
- தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான பாரம்பரிய நடனம் என்றால், அது பரத நாட்டியம்.
- பிரிட்டிஷ் காலத்தில் தமிழ்நாடு "மெட்ராஸ் பிரசிடென்சி என்று அழைக்கப்பட்டது."
- தமிழ்நாட்டின் பாரம்பரிய நாட்டுப்புற நடனங்கள் என்றால், அது கோலாட்டம், கரகம் மற்றும் மயிலாட்டம் ஆகும்.
- 1986 ஆம் ஆண்டில் சட்ட மேலவை ரத்து செய்யப்பட்டு தமிழ்நாடு ஒரே மாநிலமாக மாறியது.
- மனித வளர்ச்சி குறியீட்டின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் பரப்பளவில் மிகப்பெரிய மாவட்டமாகும். மேலும் மக்கள் தொகையில் அடிப்படையில் சென்னை மிகப்பெரிய மாவட்டம்.
- இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் தான்.
- தமிழ்நாடு வடமேற்கில் கர்நாடகா, வடக்கில் ஆந்திரா மற்றும் மேற்கில் கேரளா என 3 மாநிலங்களின் எல்லையைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டின் கனிம வளங்கள் என்றால், அது லிக்னைட், சுண்ணாம்பு, மேக்னசைட், மைக்கா, குவார்ட்ஸ், ஃபெல்ஸ்பார், பாக்சைட், ஜிப்சம் ஆகும்.
- தமிழ்நாட்டின் கிழக்கு பகுதியில் பழனி மலைகள் உள்ளன. மிகவும் பிரபலமான மலைப்பிரதேசமான கொடைக்கானல் தமிழ்நாட்டில் தான் அமைந்துள்ளது.



- இந்தியாவிலேயே வாழைப்பழம், மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- மாம்பழம், தேங்காய், நிலக்கடலை ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய மாநிலமாகும்.

# “தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளால் தலைநிமிர்ந்த வாழ்வு”

என் பெயர் கலைச்செல்வி, நான் தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது வாழ்வாதார மேம்பாட்டிற்காக எங்கள் பகுதியில் செயல்பட்டு வந்த தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை தயாரிக்கும் தொழிற்கூடத்தில் கூலி வேலைக்கு சென்று வந்தேன். அதன் மூலம் கிடைத்த வருமானம் எனது குடும்பத்தின் வறுமையை போக்க போதுமானதாக இல்லை. தனியார் நுண்நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கியே காலத்தை கடத்திக் கொண்டிருந்தேன். இத்தகைய சூழ்நிலையில் புன்னைநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்ட செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவில் ஒரு உறுப்பினராக இணைந்தேன்.





நான் செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்த பின்னர் குழுவின் மூலமாக உள்கடனாக மூன்று முறை தலா ரூ.20,000/- பெற்று அத்தொகையினை கொண்டு தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை தயாரிக்க கூலித் தொழிலாளியாக சென்ற பொழுது கற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் நான் சுயமாக தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை உற்பத்தி செய்யும் தொழில் செய்யத் துவங்கினேன்.

இப்பொம்மைகள் தயாரிக்கத் தேவையான அடிப்படை மூலப்பொருட்களான சுண்ணாம்பு தூள் மற்றும் காகிதம் ஆகியவற்றை கடலூர் மாவட்டத்திலிருந்து கொள்முதல் செய்து தலையாட்டி பொம்மைகளை நான் தயாரித்து வருகிறேன்.

என்னுடைய தொழிலில் எனது கணவரும், குடும்ப உறுப்பினர்களும் உறுதுணையாக இருந்ததால் அதிகளவில் பொம்மைகள் தயாரிக்க முடிந்தது. நாளொன்றிற்கு ஒரு நபருக்கு 15 பொம்மைகள் வீதம் குழு உறுப்பினர்களைக் கொண்டு 60 பொம்மைகள் தயாரித்து வருகின்றேன். எங்கள் குழுவினர் தயாரிக்கும் நடனமாடும் பொம்மை, தலையாட்டிப் பொம்மை, செட்டியார் பொம்மை போன்றவைகள் மிகவும் பிரசித்திப் பெற்றவை.

தலையாட்டி பொம்மை ரூ.40/-க்கும், நடனமாடும் பொம்மை ஜோடி ஒன்று ரூ.150/-க்கும் தஞ்சை மாவட்டத்திலுள்ள மதி விற்பனை அங்காடிகளிலும் (தஞ்சை தாரகைகள்) மற்றும் தஞ்சை இரயில் நிலையத்தில் புதிதாக துவக்கப்பட்டுள்ள ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு (One Station, One Product) நிலையத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் விற்பனை நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ஒரு நாளைக்கு ரூ.1000/- முதலீடு செய்து ரூ.900/- வரை இலாபம் ஈட்டி வருகிறேன். இதன் மூலம் ஒரு வருடத்திற்கு ரூ.1.50 இலட்சம் வருமானம் வருகிறது.

ஒரு வாரத்திற்கு சராசரியாக தஞ்சை தாரகை விற்பனை அங்காடிகளில் ரூ. 1,00,000/- மதிப்பிலான பொம்மைகளும் மற்றும் தஞ்சை இரயில் நிலையத்தில் செயல்பட்டு வரும் விற்பனை நிலையத்தில் ரூ. 25,000/- மதிப்பிலான பொம்மைகளும் விற்பனை ஆகின்றது.

வருடத்திற்கு ரூ.1.50 இலட்சம் எனக்கு வருமானம் வருகிறது. என்னுடைய வாழ்வாதாரம் உயர்வதற்கு காரணமாக இருந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

- கலைச்செல்வி, செம்பருத்தி மகளிர் சுய உதவி குழு, புன்னைநல்லூர் ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.

# வாழ்வாதாரத்தை உயர்த்திய வாழ்வாதார இயக்கம்

என் பெயர் கோமதி. நான் நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை வட்டாரம், சோழசிராமணி ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனது குழந்தை பிறந்த போதே மாற்றுத் திறனாளியாக பிறந்ததால், எனது கணவர் எங்களை விட்டு பிரிந்து சென்றார். எனது மாற்றுத் திறனாளி குழந்தையுடன் பொருளாதாரத்தில் நான் மிகவும் சிரமப்பட்டேன்.

இத்தகைய சூழ்நிலையில் மகளிர் குழு குறித்து அறிந்து கொண்ட எங்களது பகுதியில் உள்ள 12 பெண்கள் இணைந்து 2000ஆம் ஆண்டில் துர்க்கை மகளிர் சுய உதவி குழுவினை அமைத்து, மாதம்தோறும் ரூ. 50/- வீதம் சேமித்து வந்தோம். இந்த சூழ்நிலையில் எனது குழந்தையும் இறந்து விட்டது. ஆதரவற்ற நிலையில் நான் இருந்தபோது, எனது குழுவின் உறுப்பினர்களின் ஊக்கத்தினால் தையல் தொழிலை செய்து வருவாய் பெற்று வந்தேன். தொடர்ந்து குழுவாக இணைத்து தையல் தொழிலை செய்திட முடிவெடுத்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் சமுதாய முதலீட்டு நிதியாக 50 ஆயிரம் ரூபாய் பெற்று மூன்று தையல் இயந்திரம் வாங்கி தொழிலை துவங்கினோம்.



மேலும் 6 உறுப்பினர்களுக்கு டாப்செட்கோ கடனாக வங்கியில் 6 இலட்சம் ரூபாய் பெற்று, அத்தொகையிலும் தையல் இயந்திரங்கள் வாங்கி, தையல் தொழில் செய்து, நானும் எனது குழு உறுப்பினர்களும் தினசரி ரூ. 500/- வரை வருமானத்துடன் வாழ்வதாரத்தை உயர்த்தியுள்ளோம்.

ஆதரவற்ற நிலையில் இருந்த என்னுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திட உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கோமதி, துர்க்கை மகளிர் சுய உதவி குழு,
சோழசிராமணி ஊராட்சி, நாமக்கல் மாவட்டம்.

# DDU-GKY திட்டத்திற்கு நன்றி...




திருப்பூர் மாவட்டம், பெரிய வரப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வரும் குணசேகரன், டிப்ளமோ மெக்கானிக்கல் படித்த பிறகும் உரிய வேலை வாய்ப்பு கிடைக்காததால், தனது குடும்பத் தொழிலான தச்சு வேலையைத் செய்து வந்தார். அவருக்கு இயந்திர தொழில்நுட்பம் குறித்த எவ்வித தொழில் அனுபவமும் இல்லை. என்றாலும், தனது வேலை தேடலை அவர் நிறுத்தவே இல்லை. தனக்கென இயந்திர தொழில் நுட்பத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான வழியைத் தேடினார். அந்த நேரத்தில் அவர் வசித்து வரும் கிராமத்தில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பணியாளர்கள் மூலம் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிகள் வழங்கும் தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டம் பற்றி அறிந்து கொண்டார்.

பின்னர் அவர்களின் வழிகாட்டுதலின்படி DMW கல்வி மற்றும் அறக்கட்டளையில் DDU-GKY திட்டத்தின் மூலம் CNC ஆபரேட்டர் பயிற்சியை கற்க தேர்வு செய்யப்பட்டார். இலவச உணவு மற்றும் தங்குமிடத்துடன் பயிற்சி பெற்ற குணசேகரன், பயிற்சிக்குப் பிறகு ஈரோட்டில் உள்ள DMW CNC சொல்யூஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் மாதம் ரூ.15,000/- ஊதியத்தில் பணிபுரிகிறார்.

தற்போது குணசேகரன் நவீன தொழில்நுட்ப இயந்திரமான NHX 6300 இயந்திரத்தை இயக்குகிறார். மேலும் இந்த வகை CNC மெஷின்கள் மூலம் தனது குடும்பத் தொழிலான தச்சு வேலையை உருவாக்க அவர் திட்டமிட்டு, அதற்காகத் தன்னை தயார்படுத்திக் கொண்டு வருகிறார். DDU-GKY திட்டத்தின் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் பயிற்சியும், தொழில் வாய்ப்பும் பெற்ற குணசேகர், தனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய DDU-GKY திட்டத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

## வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

## LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

# திறன் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு

என் பெயர் S.குமுதா, க/பெ. S. செந்தில்குமார், காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காட்டில் வசித்து வரும் நான், எனது கணவரின் வருமானத்தில் இரண்டு பெண் குழந்தைகளுடன் சிரமமான முறையில் குடும்பத்தை நடத்தி வந்தேன். தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பல்வேறு வகையான பயிற்சிகளை இலவசமாக வழங்குவதை அறிந்து கொண்ட நான், தையல் பயிற்சி பெற தேர்வு செய்யப்பட்டேன்.

எனக்கு 15.07.2022 முதல் 29.08.2022 வரை பயிற்சி வழங்கப்பட்டது. தொழில்முறை பயிற்சியாளர்கள் சிறப்பான முறையில் பல்வேறு வகையான தையல், கட்டிங் மற்றும் பேட்டர்ன் மேக்கிங் என தையல் பயிற்சி அளித்தனர்.பயிற்சி முடித்த பின்னர் பயிற்சி நிறுவனத்தின் மூலம் எங்களுக்கு 14.11.2022 அன்று தேர்வு நடத்தப்பட்டது. பிறகு பயிற்சி நிறுவனம் எங்களுக்கு Sewing Machine Operator Certificate & Mark sheet-ia வழங்கியது.



நான் சொநதமாக தையல் தொழிலைத் தொடங்க நம்பிக்கையுடன் இருந்தேன். எனக்கு பயிற்சி அளித்தது மட்டும் இன்றி எனது வீட்டிற்கு அருகில் உள்ள தையல் கடையில் பயிற்சி நிறுவனத்தின் மூலம் ரூ. 7700/- ஊதியத்தில் வேலை வாங்கி கொடுத்தனர். மேலும் என் வீட்டிலேயே ரவிக்கை மற்றும் சுடிதார் போன்றவற்றை தைத்து கொடுத்து அதன் மூலமும் வருவாய் பெற்று வந்தேன்.

நான் எங்கள் பகுதியில் செயல்படும் மகளிர் குழுவில் உறுப்பினராக இருப்பதால், சொந்தமாக தையல் தொழில் தொடங்க வேண்டும் என்ற விருப்பத்தில் மகளிர் குழுவின் மூலம் கடன் கேட்டு விண்ணப்பித்தேன். எனக்கு ரூ.50,000/- கடன் கிடைத்தது. அந்தத் தொகையைக் கொண்டு, சொந்த தையல் இயந்திரம் ஒன்றை வாங்கி அதன்மூலம் வீட்டிலிருந்தபடியே வேலை செய்து வருகிறேன். எனக்கு இதன் மூலம் நல்ல வருமானமும் கிடைக்கிறது.

இப்போது, எனது சொந்த தையல் தொழிலை சிறப்பான முறையில் நடத்தி வருவதால் எனக்கு கணிசமான அளவு வருவாய் கிடைத்து வருகிறது. தற்போது நான் மகிழ்ச்சியாகவும், தன்னம்பிக்கையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது வாழ்க்கையை மாற்றிய தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- எஸ். குமுதா,
மாங்காடு, காஞ்சிபுரம் மாவட்டம்.

# அஷ்டலெட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

என் பெயர் பிச்சம்மாள், நான் தென்காசி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சி பகுதியில் வசித்து வருகிறேன். நான் எங்கள் குலத்தொழிலான மண்பாண்டத் தொழிலை செய்து வருகிறேன். ஆரம்ப காலத்தில் மண்பானைகள், தட்டுகள் மற்றும் அடுப்பு மட்டும் செய்து வந்தோம். ஆண்கள் மண்பாண்டங்கள் செய்வார்கள். பெண்கள் பகுதி நேர வேலை செய்தல் மற்றும் பீடி சுற்றுதல் போன்ற தொழில் செய்து அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்ப செலவினங்களை சமாளித்து வந்தோம். மேலும் குழந்தைகளின் கல்வி, மருத்துவம் மற்றும் இதர செலவினங்களுக்கு வெளி இடங்களில் வட்டிக்கு கடன் வாங்குவோம்.

மண்பாண்டம் செய்வதற்குத் தேவையான மண் கிடைப்பதற்கு மிக அரிதாகவும், சிரமமாகவும் இருந்ததால் நாங்கள் குல தொழிலை விட்டுவிட்டு வேறு கூலி வேலைகள் மற்றும் பீடி சுற்றுதல் வேலைகளுக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

அப்போது இலஞ்சி பேரூராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் உள்ள சமுதாய அமைப்பாளர், இத்திட்டத்தின் மூலம் தனிநபர் கடன், மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்வதன் முக்கியத்துவம் மற்றும் சுய உதவிக் குழு மூலம் கிடைக்கக் கூடிய பயன்பாடுகள் குறித்து எடுத்து கூறினார். அதன் பிறகு எங்கள் சமூ கத்தைச் சார்ந்தவர்களை மட்டும் தேர்வு செய்து 13 உறுப்பினர்களை சேர்த்து "அஷ்டலெட்சுமி மகளிர் சுய உதவிக் குழு" என்ற பெயரில் குழுவினை ஆரம்பித்து அதில் நான் ஊக்குனராக இருக்கிறேன்.

குழுவில் ஆரம்ப கலத்தில் சேமிப்பு தொகை ரூ.100/- கட்டி வந்தோம். மூன்று மாதங்களுக்கு பின் எங்கள் குழுவிற்கு சுழல் நிதியாக ரூ.10,000/- வழங்கப்பட்டது. மேலும் சேமிப்புத் தொகையின் மூலம் உள்கடன்கள் பெற்று, அதன் மூலம் எங்கள் குழந்தைகளின் கல்விச் செலவு மருத்துவம் மற்றும் இதர செலவினங்களை செய்து வந்தோம் பின் நாங்கள் பீடி சுற்றும் தொழிலை விட்டுவிட்டு எங்கள் குல தொழிலான மண்பாண்ட பொருட்கள் செய்யும் தொழிலை செய்யலாம் என முடிவு செய்து, எங்கள் அஷ்டலெட்சுமி சுய உதவிக் குழுவின் 13 உறுப்பினர்களுக்கும் வங்கி கடனாக ரூ.50,000/- வீதம் ரூ.6,50,000/- கடன் பெற்றோம்.

மேலும் மண்பாண்ட பொருட்கள் செய்வதற்கு மிக முக்கியமான மூலதனமான களிமண், வண்டல் மண், செம்மண் ஆகிய மண்கள் எடுப்பதற்கு எங்கள் சங்கத்தில் மொத்தமாக பணம் கட்டி ஒவ்வொரு நபர்களுக்கும் தேவையான 1 அல்லது 2 லோடு வீதம் மொத்தமாக 5 முதல் 6 லோடு வரை மண் எடுப்போம். அதில் ஒவ்வொரு நபர்களும் வீட்டில் இடம் இருப்பவர்கள் வீட்டில் பொருட்கள் செய்வார்கள். ஒரு நபர் 1 அல்லது 2 சுள்ளைக்கு போட வேண்டிய பொருள்களை செய்து அதனை மொத்தமாக கொண்டு வந்து சங்கத்தில் உள்ள குடோனில் குறைந்தது 6 லிருந்து 7 சுள்ளை வரைக்கும் போடுவார்கள்.

நாங்கள் அனைவரும் கார்த்திகை தீப விளக்கு, பானைகள், தொட்டி, பூந்தொட்டி, பிள்ளையார் அச்சு உண்டியல் ஆகிய பொருட்களைத் தயார் செய்து, இந்த பொருட்கள் அப்பகுதியில் உள்ள மக்களிடம் விற்பனை செய்வதுடன், கேரளாவுக்கும் மொத்தமாக அனுப்பி விற்பனை செய்து வருவாய் பெற்று வருகிறோம். இந்த வருமானத்தின் மூலம் நாங்கள் பெற்ற வங்கி கடன் தொகையினை திரும்ப செலுத்தி வருவதுடன், எங்களது குடும்ப தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறோம்.

மேலும் வங்கிக் கடனை திரும்ப செலுத்திய பின் எங்கள் குழுவிற்கு இரண்டாவது தவணையாக ரூ.75,000/- வீதம் 13 உறுப்பினர்களுக்கு ரூ.9,75,000/- லட்சம் பெற்று, எங்களது தொழிலை கூடுதலாக விரிவுபடுத்துவதற்கு புதுப்புது அச்சுக்களை வாங்கி கூடுதலாக பொருட்கள் செய்து ஆட்கள் போட்டு வேலை செய்யும் அளவுக்கு எங்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது.

மேலும் எங்கள் பகுதியில் உள்ள சுய குழுக்களை சேர்த்து "சிற்றாறு மகளிர் பகுதி அளவிலான கூட்டமைப்பு" என்ற பெயரில் கூட்டமைப்பினை அமைத்துள்ளோம். இந்த கூட்டமைப்பின் மூலம் பெருங்கடன் பெற்று எங்கள் அஷ்டலெட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவின் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நாங்கள் செய்து வரும் தொழிலினை விரிவுபடுத்தலாம் என முடிவு செய்துள்ளோம். எங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

- உறுப்பினர்கள்,
அஷ்டலெட்சுமி மகளிர் சுய உதவிக் குழு,
இலஞ்சி பேரூராட்சி, தென்காசி மாவட்டம்.



# அக்ஷயா மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி

நாமக்கல் மாவட்டம், சின்னமுதலைப்பட்டி என்ற ஊராட்சியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த 12 மகளிரை இணைத்து அக்சயா என்ற மகளிர் சுய உதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டது. மாதாந்திர சேமிப்பு ரூ.70/- வீதம் ஒவ்வொரு உறுப்பினர்களும் குழுவிற்கு வழங்கினர். மேலும், பெறப்பட்ட சேமிப்புத் தொகையிலிருந்து குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கு 12 சதவீதம் வட்டியில் உள்கடனாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

இக்குழுவின் உறுப்பினர்கள் மசாலாப் பொருட்கள் மற்றும் ஊறுகாய் வகைகள் வீட்டிலேயே தயாரித்து பிரதி வாரம் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் விற்பனை செய்து வந்தனர். பின்னர் சிறிய அறை கொண்ட கடையினை வாடகைக்கு எடுத்து மசாலாப் பொருட்களை விற்பனை செய்து வந்தனர்.

இச்சூழ்நிலையில் 2014 ஆம் ஆண்டு சின்ன முதலைப்பட்டி ஊராட்சியானது நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக நாமக்கல் நகராட்சியில் உள்ள பழைய சுய உதவிக் குழுக்களை கண்டறியும் பணி நடைபெற்றது. இதில் அக்ஷயா மகளிர் சுய உதவிக் குழுவின் விவரமும் சேகரிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் 12 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குழுவில் பல்வேறு காரணங்களால் 2 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தது கண்டறியப்பட்டது. பெறப்பட்ட சேமிப்பு தொகையினில் இருந்து சுய தொழில் தொடங்குபவருக்கு முன்னுரிமை அடைப்படையில் உள்கடன் வழங்கலாம் என இக்குழுவினால் முடிவெடுக்கப்பட்டது. மேலும் இக்குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு சுழல் நிதியாக ரூ.10,000/- வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநில அலுவலகத்தின் அறிவுரையின்படி சுய வேலைவாய்ப்பு தொழில் செய்யும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கும் விபரம் இக்குழுவிற்கு விழிப்புணர்வாக வழங்கப்பட்டது.

இந்த குழுவில் உள்ள கனகலட்சுமி, சித்ரா, சுகுணா, ரேணுகா மற்றும் கன்னியம்மாள் ஆகிய உறுப்பினர்கள் இட்லி மாவு அரைத்து விற்பனை செய்யும் தொழிலிலை தொடங்க முடிவுச் செய்தனர். இத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்களான இட்லி அரிசி, உளுந்து, வெந்தயம் ஆகியவற்றை தரமாகவும் அதிக அளவில் குறைந்த விலையில் பெற நேரடி கொள்முதல் செய்ய வழிகாட்டப்பட்டது. இந்த நடவடிக்கையால் மூலப்பொருட்கள் பெறுவதற்கான செலவினத் தொகை குறைக்கப்பட்டது. முதலில் ஒவ்வொரு வீடாக இட்லி மாவு விற்பனை ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 2022-ம் வருடம் வங்கி கடன் இணைப்பாக ரூ. 4,80,000/- பெறப்பட்டது.

இதனால் பெரிய அளவில் இட்லி மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கப்பட்டது. இதனை தொடர்ந்து திட்ட வழிகாட்டுதலின்படி உணவு பாதுகாப்பு கழகத்தால் FSSAI சான்றிதழில் குழுவின் பெயரால் பெறப்பட்டது. தற்போது "அக்க்ஷயா" என்ற பிராண்ட் பெயரில் நாமக்கல் நகராட்சியை சுற்றியுள்ள மளிகை கடைகள், சிறிய உணவகங்கள் ஆகியற்றுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கூடுதலாக திருமண நிகழ்ச்சிக்கும் ஆர்டரின் பெயரில் விற்பனை செய்யப்படுகிறன. மற்ற நிறுவனங்களில் விற்கப்படும் இட்லி மாவை விட அக்க்ஷயா சுய உதவிக் குழு தயாரிக்கும் இட்லி மாவு அதிக நாட்களுக்கு கெடாமலும், புளிப்பு தன்மை இல்லாமல் இருப்பதால் மக்களிடையே வரவேற்பு பெற்றள்ளது. இத்தொழிலை மேற்கொள்வதன் மூலம் நாள் ஒன்றுக்கு மொத்த வருமானமாக ரூ.4750/- கிடைக்கிறது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 55 கிலோ மாவு அரைத்து விற்பனை செய்து வருகின்றனர். விஷேச நாட்களில் 100 கிலோ ஆர்டர் பெற்று மாவு அரைத்து தருகிறார்கள். இத்தொழில் செய்வதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.7800/- முதல் ரூ.900/- வரை வருமானம் ஈட்டுகின்றனர்.

இக்குழுவினர் வெளியில் கூலி வேலைக்கு போகாமல் சொந்தமாக தொழில் செய்வதை பெருமையாக நினைக்கின்றனர். மேலும் இக்குழுவிலுள்ள லோகநாயகி, பரமேஸ்வரி ஆகியவர்கள் திட்ட வழிகாட்டுதலின்படி அங்கன்வாடி மையத்தில் சத்துணவு பணியாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.

மேற்கண்ட செயல்பாடுகள் மூலும் அக்ஷயா மகளிர் சுய உதவிக்குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வாழ்வாதார வளம் பெற்றுள்ளனர். தங்களின் முன்னேற்றத்திற்கு காரணமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அக்ஷயா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## வணிகம் வளர்க...

# தேனி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

## தேனி மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| தேவிகா மகளிர் சுய உதவிக் குழு<br>தேனி மாவட்டம்.<br>கைபேசி : 77081 92758 | முல்தானி மட்டி, மஞ்சள் தூள், குளியல் பவுடர் |  |
| வாஹின் மகளிர் சுய உதவிக் குழு,<br>தேனி மாவட்டம்<br>கைபேசி : 99408 11844 | கேரட், பீட்ருட் மற்றும் சிறுதானியங்கள், சத்து மாவு - |  |
| மலர்ச்சி மகளிர் சுய உதவிக் குழு,<br>தேனி மாவட்டம்<br>கைபேசி : 95003 83159 | சணல் கைவினைப் பொருட்கள் |  |
| காமாட்சியம்மன் மகளிர் சுய உதவிக் குழு,<br>தேனி மாவட்டம்<br>கைபேசி : 97904 28623 | மூங்கில் கைவினைப் பொருட்கள் |  |
| ஹனி மகளிர் சுய உதவிக் குழு,<br>தேனி மாவட்டம்<br>கைபேசி : 74486 45852 | இயற்கைத் தேன் |  |

# புதிய IoT நுட்பத்தில் நலம் தித்திக்கும் நிலையான தேனீ வளர்ப்பு!

தேனீ வளர்ப்புத் தொழில் நலமான சுற்றுச்சூழலுக்கும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் மிகவும் துணை புரிகிறது. தேனீக்கள் தாவரப் பயிர்கள் மற்றும் பல்வேறு தாவர சமூகம், மலர் பன்முகத்தன்மை மற்றும் பரிணாம வளர்ச்சியில் மரபணு மாறுபாடுகளை பராமரிக்கத் தேவையான ஆதாரத்தை வழங்குகின்றன.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிருஷ்ணகிரி வட்டாரம், கம்மம்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்ட தாமரை தொழிற்குழுவில் உள்ள 20 உறுப்பினர்கள் தேனீ வளர்ப்புத் தொழிலை செய்து வருகின்றனர். 25 பெட்டிகள் மற்றும் 75 தேன்கூடு அமைப்புகளை வைத்துள்ள இக்குழுவினர், ஒவ்வொரு தேன்கூடு அமைப்பிலும் 5-6 கிலோ வீதம் ஆண்டுக்கு 412 கிலோ தேனினை உற்பத்திச் செய்து, உள்ளூர் சந்தையிலும், கிருஷ்ணகிரி ஆட்சியர் அலுவலக வளாகக் கடையிலும் விற்பனை செய்கின்றனர்.



தேனீ வளர்ப்பவர்கள் ஒவ்வொரு முறையும் தேனீ வளர்ப்புப் பெட்டிகளில் உள்ள தேன் கூடு பலகையை ஆராய்ந்து தேனீக்களின் ஆரோக்கியத்தையும், தேன் உற்பத்தியையும் அளவிட வேண்டும். இந்தப் பணியில் ஈடுபடும் தேனீ வளர்ப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர். அதனால் தேனீ வளர்ப்பவர்கள் உயர் நுட்ப சோதனைகளை நம்பியிருக்கிறார்கள். எனினும் எமது ஆராய்ச்சியில் 80%, தாமே ஆராயும் தேன்கூடு அமைப்பில் எந்த நுண் நுட்ப முறையும் இல்லை. மாறாக, தேனீ கூட்டத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், ராணி தேனீக்களை இழக்கும் அபாயமும் உள்ளது.

புதிய IoT தொழில்நுட்பத்தில் ஒரு ஒருங்கிணைந்த சென்சார் அமைப்பின் மூலம் தேன்கூடு அமைப்பை ஆராய முடிகிறது. இந்த IoT தொழில்நுட்பம் எளிமையான செயல்பாடுகளை கொடுப்பதுடன், தேனீ வளர்ப்பவர்களுக்கு சரியான தேனீ வளர்ச்சியளவை காட்டி, சரியான முடிவெடுக்க உதவுகிறது.

இந்த புதுமையான IoT தொழில்நுட்பம் தானியங்கியாக மற்றும் தடையற்ற செயல்பாட்டை வழங்குவதுடன், நோய், பூச்சிகள் மற்றும் பிற தேன்கூடு பிரச்சனைகளை கண்டறிந்து, அதற்கு தகுந்த நேரத்தில் தீர்வை வழங்க உதவுகிறது. மேலும், தேனீ வளர்ப்பவர்களுக்கு அவர்களின் செயல்பாட்டில் உள்ள குறிப்பிட்ட தேன்கூடு நோய்களுக்கு கவனம் தேவைப்படும் போது உடனடியாக எச்சரிக்கிறது.

### பசுமை செயல்பாடுகளின் நன்மைகள்

மகரந்தச் சேர்க்கை மூலம் சுற்றுச்சூழல் பல்லுயிர் மற்றும் பயிர் உற்பத்தியைப் பராமரித்தல், உயிர் குறிகாட்டிகளாக செயல்படுவதன் மூலம் சுற்றுச்சூழல் நிலையை கண்காணிப்பதில் பங்களிப்பு, தேனீக்களுக்கான புதுப்பிக்கத்தக்க இயற்கையான கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்துதல், உள்நாட்டு தேனீ இனங்கள் மற்றும் குறைந்த சுற்றுச்சூழல் தாக்கம் கொண்ட தொழில்நுட்பங்கள் ஆகியவை எல்லா சூழல்களிலும் நன்மையைப் பயக்கும் விதமாக அமைந்துள்ளது.

தாமரை தொழிற்குழு தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், புதுமை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆரோக்கியமான முறையில் தேனீக்களை வளர்க்கும் தொழிற்குழுவாகவும் விளங்குகிறது.

# புதுமையான IoT தொழில்நுட்பத்தில் நிறைவான சிப்பிக் காளான் வளர்ப்பு!

சிப்பிக் காளான் ஒரு புரதம் நிறைந்த உணவுப் பொருள் ஆகும். இதை குறைந்த இடத்தில் வளர்க்க முடியும். சந்தையில் சிப்பிக் காளானுக்கு அதிக தேவையுள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வீட்டில் மகளிரும் இளைஞர்களும் நல்ல முறையில் காளானை வளர்த்து இலாபகரமாக வருவாய் ஈட்ட முடியும். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நடத்திய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கூட்டத்தில், தொழிற்குழுவின் உறுப்பினர்கள் சிப்பிக்காளான் வளக்கும் தொழிற் பயிற்சியை எடுத்துக்கொண்டு கூடுதல் வருவாயை ஈட்டும் வாய்ப்பை உருவாக்கிக்கொள்ள தீர்மானித்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், கூட்டுடன்காடு ஊராட்சியில் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை நவீன தொழில்நுட்பமான நுட்ப முறையில் காளான்களை வளர்க்க 20 பெண்கள் பயிற்சியை எடுத்துக் கொண்டனர். இயற்கை பொருட்களைப் பயன்படுத்தி அறையைகிருமிநீக்கம்செய்வதுமற்றும் பைகளை அமைப்பது குறித்து பயிற்சியாளர்களுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில்



வளர்க்கப்பட்ட காளான்களை முழுமையாக அறுவடை செய்ய கிட்டத்தட்ட ஒரு மாதம் காலம் ஆனது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொழிற்பயிற்சிக்காக 75,000/- ரூபாய் பயிற்றுநர் திரு. ஞானக்குமார் ராஜாவிடம் வழங்கப்பட்டது. இந்த நிதியில் ரூ. 28,000/- மதிப்பில் 10 x 10 அடி அளவில் குடில் அமைத்து, நீளமான உருளை பைகளில் காளான்கள் வளர்க்கப்பட்டன. இந்த தொழிற்பயிற்சி நிறைவுற்றவுடனே 17 மகளிர் ஒருங்கிணைந்து தொழிற்குழுவை அமைத்துக்கொண்டு சிப்பிக் காளான்களை வளர்த்து வருகின்றனர்.

"செப்டம்பர் மாதத்தில் 50 கிலோ காளானை அறுவடை செய்து, தூத்துக்குடியில் ஸ்டால் அமைத்து ஒரு கிலோ காளான் ரூ. 200/- வீதம் 50 கிலோ காளானை விற்பனை செய்தோம். மேலும் காளானிலிருந்து மீறும் பொருட்களை வீணாக்காமல் அவற்றை இயற்கை உரமாக உற்பத்தி செய்து, கிலோ 10 ரூபாய் விலையில் 200 கிலோ வரை விற்றுள்ளோம். அது தவிர ஒரு சாகுபடிக்கு 12-20 கிலோ வரை அறுவடை செய்துள்ளோம். ஒரு முறை விதையிடும் காளான்களை 3 முறை அறுவடை செய்ய முடியும்." என்று தொழிற்குழுவினர் கூறினர்.

இப்போது, இத்தொழிற்குழுவினர் புதிய காளான் தொகுப்பை அமைத்து, 200 கிலோ வரை விளைவிக்க செயல்பட்டு வருகின்றனர். இந்த தொழிற்குழு மூலம் விளைவிக்கப்படும் காளான்கள் குழு உறுப்பினர்கள் மூலம் ஸ்டால்கள் வழியாக விற்பனை செய்து வருகின்றனர். இதனுடன் காளான் சூப், காளான் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிக்க பயிற்சி பெற்று வருகின்றனர்.

# வெல்டிங் தொழிலில் புது வேகம்! புது வளர்ச்சி!

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வெல்டிங் பயிற்சியாளர்களுக்கு நுணுக்கமான வடிவமைப்பு, திறன் மற்றும் தொழிற் பயிற்சியுடன் IIT-M நிறுவனம் கூடுதல் மைல் கல்லை தொட்டுள்ளது!

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி (CSS) வெல்டிங் பயிற்றுநர்களின் நிபுணத்துவத்தை அதிகரிக்க, IIT-M 2023 ஜுன் 17 அன்று வடிவமைப்பு, திறன் மற்றும் சிக்கல் தீர்க்கும் முறைகள் குறித்த 1 நாள் நுணுக்கமான பயிலரங்கை ஏற்பாடு செய்தது. இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் (PSA) அலுவலகத்தைச் சேர்ந்த டாக்டர் கேதகி பாபட் இந்த பயிலரங்கில் கலந்து கொண்டார்.



இந்த நுணுக்கமான பயிலரங்கு நிகழ்ச்சியின் நோக்கம் வெல்டிங் தொழிலில் புதிய தொழில் நுணுக்கங்களை கற்பிப்பதாகும். இந்த பயிலரங்கு, தொழிலில் உள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கான படைப்பாற்றலையும், புத்தாக்கம் தொடர்பான மேம்படுத்தப்பட்ட நுண்ணறிவுகளையும் வழங்கியது.

இந்த பயிலரங்கு, வெல்டிங் தொழிலுள்ள சிக்கல்களை சரிசெய்வதற்கான அடித்தளத்தை வெல்டர்களுக்கு அமைத்துக் கொடுத்தது. பயிற்சியாளர்களுக்கு ஆதரவான சூழலில் புதிய நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்கும், பயிற்சி செய்வதற்கும் ஒரு தனித்துவமான கற்றல் வாய்ப்பை வழங்கியது. இந்த செயல்முறை பயிற்சிகள் வெல்டர்களின் கண்ணோட்டங்களை மாற்றியமைத்ததுடன், தொழில் நுணுக்க புரிதலை ஆழமாகப் பதிய வைத்தன. இந்த அனுபவம் வெல்டர்களின் கைத்தொழில் திறனை உயர்த்தியதுடன், சமுதாயத் திறன் பள்ளி (CSS) பயனாளிகளுக்கு சிறந்த பயிற்சியளிக்க வெல்டிங் பயிற்றுநர்களுக்கு முழுமையான நிபுணத்துவத்தை அளித்தது.

### 'Crossfyre'- என்ற நிறுவனம், வெல்டிங் சமூகத்திற்கு ஒரு பிரத்தியேகமான அமைப்பு ஆகும்.

பயிற்சிக்குப் பிறகு, வெல்டர்களுக்கு 'கிராஸ்ஃபைர்' அமைப்பில் சேருவதற்கான பிரத்தியேக வாய்ப்பு வழங்கப்பட்டது. இது IIT-RuTAG ஏற்பாடு செய்த ஒரு தளமாகும். இந்த உதாரண மையம், முன்மாதிரிகள் மற்றும் உறுப்பினர்களின் படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கான மையமாக செயல்படுகிறது. வெல்டர் சமூகத்திற்கான இந்த பிரத்தியேக தளம் அவர்களின் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் நிபுணத்துவத்தை விரிவுபடுத்தவும், முழுமையாக வெல்டிங் தொழிலுக்கு பங்களிக்கவும் உதவியுள்ளது.

### உள்ளூர் அளவில் வெல்டிங் தொழிலில் ஒரு புதிய வளர்ச்சி

தமிழ்நாட்டின் 6 மாவட்டங்களைச் சேர்ந்த CSS பள்ளிகளின் 20 வெல்டிங் பயிற்றுநர்களின் ஆக்கம் நிறைந்த பங்கேற்புடன் அதன் முந்தைய பயிற்சித் தொகுப்பின் வெற்றியைத் தொடர்ந்து, வெல்டிங் பயிற்சியாளர்களுக்கு முழுமையான, நுட்பங்கள் நிறைந்த அனுபவத்தை வழங்கியது.

இந்த பயிலரங்கு பயனுள்ள நுண்ணறிவுகள், நேரடி பயிற்சிகள் மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான தளங்களுக்கான அணுகல் ஆகியவற்றுடன், உள்ளூர் அளவில் வெல்டிங்கின் எதிர்காலத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைத் தந்துள்ளது. வெல்டிங்கில் வடிவமைப்பு, திறன் மற்றும் சிக்கலைத் தீர்ப்பதற்கான புதிய புதுமையான வழிகளை வெல்டர்கள் பின்பற்றும்போது, அவர்கள் முன்னேற்றத்தின் ஊக்கிகளாக மாறி, வெல்டிங் துறையை விரைவுபடுத்துவர் மற்றும் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வெல்டிங் தொழிலின் புத்தாக்கத்தை செயல்படுத்துவர். இதன் மூலம் புதிய தொழில் வளத்தை தமிழ்நாட்டிற்கு உருவாக்கிடுவர்!



சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட **முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் **ஆதரவை தாருங்கள்!**




முற்றத்திற்கு சந்தா **செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.


**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# சுவையான பொங்கனம்

தினமும் ஒரே மாதிரி சமைத்து சாப்பிடுவதை தவிர்த்து, தினந்தினம் வேறு வேறு வகையான உணவுகளை சமைத்து சாப்பிடுவதை அனைவரும் விரும்புவார்கள். இம்மாதம் பொங்கனம் என்ற வித்தியாசமான பெயருடைய, சுலபமாக செய்யக் கூடிய உணவு குறித்து பார்க்கலாம்.



**தேவையான பொருட்கள் :**

மிகுந்து போன இட்லி மாவு, கடுகு - ஒரு டீஸ்பூன், காய்ந்த மிளகாய் - இரண்டு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு - தலா ஒரு டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிதளவு, மைதா மாவு - ஒரு கைப்பிடி அளவு, தயிர் - 2 டீஸ்பூன், ரவை - 2 டீஸ்பூன், தண்ணீர், எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை :**

அடுப்பில் வாணலியை வைத்து, தாளிப்பதற்கு தேவையான அளவு எண்ணெயை ஊற்றுங்கள். எண்ணெய் சூடானதும் கடுகு, காய்ந்த மிளகாய், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு தாளித்து, மிகுந்து போன இட்லி மாவில் கொட்டி நன்கு கலக்குங்கள். பிறகு மைதா மாவு, தயிர், ரவை ஆகியவற்றை மாவோடு சேர்த்துக் கலக்கி, கொஞ்சம் தண்ணீர், உப்பு சேர்த்து கலக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

அடுப்பில் தோசைக்கல்லை வைத்து, கல் சூடானதும், கரண்டியில் மாவை எடுத்து, ஓரளவுக்கு சின்னதாக ஊற்றுங்கள். எண்ணெய் விட்டு சுட்டெடுங்கள். தோசையின் நடுப்பக்கம் கெட்டியாகவும், அதன் ஓரங்கள் மொறுமொறுவென்றும் இருக்க வேண்டும். சுவையான பொங்கனம் ரெடி. இட்லி மிளகாய் பொடியுடன் சேர்த்து கொடுத்தால், இந்த பொங்கனத்தை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடுவார்கள்.

# பயனுள்ள குறிப்புகள்

- தேங்காய் தண்ணீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியாக இருக்கும்.
- ஆப்ப சட்டி மற்றும் பணியார சட்டிகளில் எப்பொழுதும் எண்ணெய் தடவியே வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆப்பம் மற்றும் பணியாரம் செய்யும்போது எளிதாக செய்யலாம்.
- கொதிக்க வைத்து ஆறிய நீரில் சீரகப் பொடியை போட்டு 12 மணி நேரம் கழித்து குடித்தால் இரத்த கொதிப்பு சீராகும்.
- மண்பாத்திரம் புதிதாக வாங்கினால் அதில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடேற்றி பின் கழுவினால் மண்வாசனையும் வராது, விரிசலும் விடாது.
- பொரித்த அப்பளம் மீதமாகிவிட்டால் அதை பாலிதீன் பையில் நன்றாக சுற்றி ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டால் ஒரு வாரம் ஆனாலும் மொறு மொறுப்பு மாறாமல் இருக்கும்.
- வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரசகற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது.
- அடைக்கு அரைக்கும் போது அரிசி பருப்புடன் இரண்டு வேக வைத்த உருளை கிழங்கு போட்டு அரைத்தால் ருசியாக இருக்கும்.

திரு. **ப. பொன்னையா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## மருதம் கீற்று வியாபாரம் கூட்டுப் பொறுப்பு குழு

சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், திருநெல்வேலி மாவட்டம் முருங்கை சாகுபடி திட்ட நிதியிலிருந்து துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. திட்டத்தின் வழிகாட்டுதலில் லெவஞ்சிபுரம், குட்டம், நவ்வலடி, க.உ வரி, திருவெம்பலபுரம், ஆகிய கூட்டமைப்பிற்குட்பட்ட பகுதிகளில் முருங்கை சாகுபடி செய்யப்படுகின்றது.

நமது திட்டத்தில் இருந்து Stella Maries (NGO) மூலமாக பயனாளிகளை தேர்வு செய்து அவர்களுக்கு முருங்கை சாகுபடி செய்யும் முறை குறித்து பயிற்சி அளித்து, தகுதியான மற்றும் ஆர்வமுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்து, அவர்களை கூட்டுப் பொறுப்பு குழுக்களாக ஒருங்கிணைத்து வங்கிக் கடனாக, நபர் ஒருவருக்கு 2,50,000 ரூபாய் வீதம் பெற்று முருங்கை சாகுபடி செய்து வருகிறார்கள். இவற்றில் சிலர் சொந்த நிலத்திலும், சிலர் குத்தகைக்கு நிலம் எடுத்தும் சாகுபடி செய்து வருகின்றனர்.

பயனாளிகளிடம் இருந்து முருங்கை இலை, முருங்கை விதை, முருங்கைக்காய் ஆகியவற்றை நாள்தோறும் சந்தை விலைக்கு ஏற்ப பெற்றுக் கொண்டு முருங்கை இலைப்பொடி, முருங்கை எண்ணெய், முருங்கை டீ தூள், பலவகையான மிட்டாய், தேன் மற்றும் அதனை சார்ந்த பொருட்களைத் தயார் செய்து சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். குறிப்பாக கேரளா மாநிலத்திற்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

கடந்த மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பல்வேறு கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன. அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், " தற்போது பிறக்கும் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக பிறப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவே வளருகின்றனர். இதனை சா செய்ய நமது தமிழ்நாடு அரசு அதிக கவனம் செலுத்தி வருகின்றது" எனக் குறிப்பிட்டார்.

அதற்கு நமது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரான திருமதி. வி.ஜெயந்தி அவர்கள் "குழந்தைகள் சத்து குறைவினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு தற்போது தீர்வாக கன்னியாகுமரியில் ஸ்டெல்லா மோரீஸ் தொண்டு நிறுவனம் மூலம் முருங்கை சம்பந்தமான பொருட்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. இதனை குழந்தைகள் தொடர்ந்து பயன்படுத்தும் போது வைட்டமின்-C மற்றும் A கால்சியம், பொட்டாசியம், தாதுக்கள், இரும்பு, புரதம், ஆண்டி ஆக்ஸிடண்ட்கள் ஆகிய சத்துகள் கிடைக்கின்றன" என கூறினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனே ஸ்டெல்லா மோரீஸ் தொண்டு நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, "எந்தெந்த உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகிறது, மேலும் அதன் தரம் மற்றும் குழந்தைகளுக்கு வழங்க ஏதுவானதா' என்பதை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு" கூறினார்.


தற்போது அதன் அறிக்கை தயார் செய்யப்பட்டு வருவதை தொடர்ந்து நமது முருங்கை சாகுபடி செய்யும் பயனாளிகள் அதன் மூலம் மிக பெரிய லாபம் ஈட்ட வாய்ப்புள்ளதாக அறியப்படுகிறது.











## வங்கிகளின் வணிக மேம்பாட்டு முகவர்களாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்





தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்தத்தன்மை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வங்கிகளுடன் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் பலகட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபின் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களை வங்கிகளின் வியாபார ஊக்குநர்களாக செயல்படுத்திட வங்கிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வங்கிகள் வழங்கப்படும் கடன் தொகையை தவணை தவறாமல் திருப்பம் செய்ய உறுதுணையாக உள்ளமைக்கு கடன் வழங்கும் போது கடன் தொகையில் ஒரு (1%) சதவீதமும், கடன் முழுமையாக திருப்பம் செய்யப்பட்டபின் ஒரு சதவீத (1%) தொகையையும் கூட்டமைப்புகளுக்கு வழங்குகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் இதுநாள் வரை 236 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 434 இலட்சம் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சராசரியாக ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும் ரூ. 1.86 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளனர்.

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 24 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கள்ளிமேடு, வேளாங்கன்னி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம், வேதாரண்யம் மற்றும் மேலச்சாலை ஆகிய இடங்களில் செயல்படும் இந்தியன் வங்கி மூலம் கடன் தொகையில் ஒரு (1%) சதவீதமும், கடன் முழுமையாக திருப்பம் செய்யப்பட்டபின் ஒரு சதவீத (1%) தொகையையும் வழங்கப்பட்டுள்ளது.

## வருமானம் பெருக்கும் நடவடிக்கைக்கான தொழில்கடன் மூலம் இறால் வியாபாரம்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் இணைந்துள்ள அப்துல் கலாம் சுய உதவிக் குழுவின் உறுப்பினரான என் பெயர் அனிதா. நான் முன்பு கூலி வேலைக்கு சென்று வந்தேன். கூட்டமைப்பில் இருந்து தொழில் செய்வதற்கு கடன் தொகை வழங்குவதாக எனக்கு தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து என்னுடைய பங்குத் தொகை ரூபாய் 2,000/-த்துடன், கூட்டமைப்பிலிருந்து கடன் தொகையாக ரூ.20,000/-ம் பெற்று தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் 15.02.2023 அன்று இறால் வியாபாரம் செய்யும் தொழிலை துவங்கினேன். நல்ல முறையில் வியாபாரம் நடைபெறுவதால் கணிசமான இலாபமும் கிடைத்து வருகிறது.

இந்த வருமானத்திலிருந்து நான் பெற்ற கடன் தொகையில் இதுவரை ரூ.8,000/-த்தை திரும்பச் செலுத்தி உள்ளேன். ஒவ்வொரு மாதமும் இலபமாக ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரை கிடைக்கிறது. இந்த வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை பொருளாததர நிலையில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கிறேன். இத்தொழில் மூலம் எனது வாழ்க்கைத் தரம் முன்பு இருந்ததைவிட தற்போது உயர்ந்துள்ளது. என்னுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,30,500 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# மகளிரின் படைப்பினில்
# ஆகாயத் தாமரை
# பொருளில் வந்தது...!



எங்கள் தொழிற்குழுவிற்கு
VKP திட்டத்தின் மூலம்
தொழிற் பயிற்சி மற்றும் தொடக்க நிதி
ரூ. 75,000 வழங்கி
ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது





நிறுவனப் பெயர் : ஆகாயத் தாமரை மலர்கள் உற்பத்தி தொழிற்குழு
மாவட்டம் : தூத்துக்குடி
வட்டாரம் : ஆழ்வார்திருநகரி
ஊராட்சி : மேல ஆத்தூர்

**உற்பத்திப் பொருட்கள்:**

- தேனீர் மேசை வில்லைகள்
- யோகாசனப் பாய்கள்
- பழத்தட்டுகள்
- விளக்குத் தாங்கி
- கைப்பை
- பெண்களுக்கான பணப்பை

இவர்களது உற்பத்திப் பொருட்களை
வாங்க தொடர்புகொள்ளவும்
93446 91356

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th August 2023 Posted at Patrika Channel, Egmore.




TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID)**

1. சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்
2. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்
3. சுய உதவிக்குழு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை மற்றும் ஆளுமை பயிற்சி வழங்குதல்

**சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP -I )**

1. தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வட்டி மான்யத்துடன் கூடிய வங்கி கடன் வழங்குதல்
2. குழு தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி மான்யத்துடன் கடன் வழங்குதல்
3. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளில் மூலம் வட்டி மான்யத்துடன் கடன் வழங்குதல்